கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

முன்னிலை: திரு ஜெ.ஆன்ஸ் ராஜா பி.ஏ, பி.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வள்ளியூர்

திருவள்ளுவர் ஆண்டு 2054 சோபகிருது வருடம் ஆவணி மாதம் 21ம் நாள் வியாழக்கிழமை

2023 ஆம் வருடம் செப்டம்பர் மாதம் 07–ஆம் நாள், வியாழக்கிழமை

**I.A.No. 03 of 2023**
**in**
**O.S. No. 152 of 2012**

மகாலிங்கம் ... மனுதாரர் / வாதி

/எதிர்/

1. ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோவில், வடலிவிளை,
அதன் ஆட்சிக்குழு தலைவர் S.முத்துக்கிருஷ்ணன் மூலம்.
... 1 ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி

2. வட்டாட்சியர், இராதாபுரம்
3. மாநில நெடுஞ்சாலைத்துறை, தமிழ்நாடு அரசு,
வள்ளியூர் கோட்டம், வள்ளியூர் அதன் பொறியாளர் மூலம்.
4. தமிழ்நாடு அரசு அதன் மாவட்ட ஆட்சியர், திருநெல்வேலி மூலம்.
... 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள்
/ 3 ம் தரப்பு உத்தேச 2 முதல் 4 பிரதிவாதிகள்

இம்மனு 24.08.2023 தேதி அன்று என் முன்னால் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. T. வீரமோகனராய் அவர்கள் ஆஜராகியும், 1 ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. ஏ. எஸ். ஞானசேகர் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசாங்க வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எடுத்துரைத்த வாத உரையை கேட்டும் சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரை

J ANNS RAJA Digitally signed by J ANNS RAJA Date: 2023.09.07 17:29:06 +0530

இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

2 முதல் 4 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 2 முதல் 4 பிரதிவாதிகளாக கட்சி சேர்த்து உத்தரவிட வேண்டி கட்டளை 1 விதி 10 (2) –ன் கீழ் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **மனுவின் சுருக்கம்:**

இம்மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். அசல் வழக்கு உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கில் 2ம் தபசில் சொத்தாக கூறியுள்ள அரசு ரோடு புறம்போக்கு தமிழ்நாடு அரசுக்கு பாத்தியப்பட்டது ஆகும். அந்த 2ம் தபசில் சொத்தான அரசு ரோடு புறம்போக்கு வழியாகத்தான் மனுதாரர் 1ம் தபசில் சொத்திற்கு சென்று வருகிறார். 2ம் தபசில் அரசு புறம்போக்கு ரோட்டை பிரதிவாதி கோவில் நிர்வாகம் ஆக்கிரமித்து கட்டுமானம் செய்ய முயற்சித்ததால் மனுதாரர் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கு தற்போது விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. இந்நிலையில் பிரதிவாதி தரப்பில் கடந்த 21.11.2022 அன்று கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2ம் தபசில் சொத்து பிரதிவாதி கோவிலுக்கு பாத்தியப்பட்டது என கூறி அந்த சொத்தை பொறுத்து தமிழ்நாடு அரசு உரிமையை மறுத்து எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் அந்த கூடுதல் எதிர்வழக்குரை பாரா 3ல் அசல் வழக்கிற்கு தமிழ்நாடு அரசும், நெடுஞ்சாலைத்துறையும் அவசிய தரப்பினர் என்றும், அவர்களை கட்சி சேர்க்காமல் அசல் வழக்கில் சரியான தீர்ப்பாணை பிறப்பிக்க முடியாது என்றும் கூறப்பட்டுள்ளது. 2ம் தபசில் சொத்தானது தமிழ்நாடு அரசுக்கு பாத்தியப்பட்டதாக இருப்பதாலும், அதுபோல 2ம் தபசில் ரோடு

J ANNS RAJA
Digitally signed by J ANNS RAJA
Date: 2023.09.07 17:29:15 +0530

தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறையின் பராமரிப்பில் இருந்து வருவதாலும், இவ்வழக்கிற்கு இராதாபுரம் வட்டாட்சியர், தமிழ்நாடு அரசு மற்றும் நெடுஞ்சாலைத்துறை மிகவும் அவசிய கட்சிகளாகும். அவர்களை கட்சி சேர்க்கிற பட்சத்தில் 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. 2 முதல் 4 எதிர்மனுதாரர்களை கட்சி சேர்த்தால் மட்டுமே அசல் வழக்கில் ஒரு சரியான தீர்ப்பாணை பிறப்பிக்க இயலும் என்பதால், உத்தேச எதிர்மனுதாரர்கனை அசல் வழக்கில் 2 முதல் 4 பிரதிவாதிகளாக கட்சி சேர்க்க வேண்டி உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>1 ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படும் கவுண்டரின் சுருக்கம்:</u>

மனுதாரர் தமிழ்நாடு அரசு, அதன் மாவட்ட ஆட்சியர், வட்டாட்சியர் மற்றும் மாநில நெடுஞ்சாலைதுறையை புதிதாக கட்சி சேர்க்க வேண்டும் என்று மனு தாக்கல் செய்துள்ளார். தபசில் சொத்து மனுதாரரின் தனித்த அனுபவத்தில் உள்ளதாகவும், மனுதாரரின் அனுபவத்தை எதிர்மனுதாரர் இடைஞ்சல் செய்யக்கூடாது என்று அசல் வழக்கு 2012ம் வருடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தற்போது 11 ஆண்டுகளுக்கு பின் மிகவும் காலம் தாழ்த்தி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் எதிர்பார்க்கப்படும் புதிய பிரதிவாதிகள் பற்றி எந்த வழக்கு மூலமும் கூறப்படவில்லை. உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே கோரப்பட்ட வழக்கில் வழக்குமூலத்தில் கூறப்படாத நபர்கள் புதிதாக சேர்க்க முடியாது. மேலும், அரசு அலுவலர்களுக்கு முன் அறிவிப்பு (Section 80 படி ) அனுப்பாமல் தாக்கல் செய்துள்ள மனு நிலைக்கத்தக்கதல்ல. புதிய கட்சிகள் மீது மனுதாரர் எந்தவிதமான பரிகாரமும் அசல் வழக்கில் கேட்கவில்லை. மேலும், வழக்கு தாக்கல் செய்து 11 ஆண்டுகளுக்கு பின் மனுதாரர் வழக்கை காலங்கடத்துவதற்காகவும், இழுத்தடிப்பு செய்வதற்காகவே

J ANNS RAJA Digitally signed by J ANNS RAJA Date: 2023.09.07 17:29:22 +0530

இந்த மனு காலங்கடந்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் 2 முதல் 4 எதிர்மனுதாரர்களை கடந்த 11 ஆண்டுகளாக கட்சி சேர்க்கவில்லை என்பதற்கு எந்தவிதமான காரணமும் மனுவில் கூறப்படவில்லை.பிரதிவாதி கூடுதல் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளதால் மட்டுமே இந்த புதிய பிரதிவாதிகள் கட்சி சேர்க்கப்படுகிறார்கள் என்று மனுதாரர் கூறியுள்ளது ஏற்புடையது அல்ல. வழக்கு தாக்கல் செய்து 11 ஆண்டுகள் முடிந்த நிலையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு காலங்கடந்தது ஆகும். வழக்கு கட்டாய விசாரணைக்காக பட்டியலிடப்பட்டுள்ளது. தற்போது மனுதாரர் தன் வழக்கறிஞரை சந்தித்து விபரம் கேட்டதாகவும், 2ம் தபசில் சொத்து தமிழ்நாடு அரசுக்கு பாத்தியப்பட்டது என்றும், தமிழ்நாடு நெடுஞ்சாலை பராமரிப்பில் இருப்பது தெரிய வந்ததாக கூறுவது உண்மையல்ல. 2 முதல் 4 எதிர்மனுதாரர்களை கட்சி சேர்த்தால் மட்டுமே அசல் வழக்கில் சரியான தீர்ப்பு பிறப்பிக்க இயலும் என்றும், மேற்படி விபரம் தற்போது வழக்கு விசாரணைக்கு போடப்பட்ட நிலையில் மனுதாரருக்கு தெரியவந்ததாக சொல்லியுள்ள சங்கதிகள் உண்மையல்ல. மனு எந்த வகையிலும் நிலைக்கத்தக்கதல்ல, செலவுத்தொகையுடன் தள்ளபடி செய்யப்பட வேண்டியதாக இருக்கிறது.

3. <u>2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்படும் கவுண்டர் மெமோவின் சுருக்கம்:</u>

மனுதாரர்/வாதி வழக்கு 2ம் தபசில் சொத்து அரசு ரோடு மற்றும் புறம்போக்கு என்று கூறியுள்ளார். ஆனால் அதற்குரிய ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை, மேலும் 1ம் பிரதிவாதி கோவில் எதிர்வழக்குரையில் கூறியுள்ளதால் அந்த 2 முதல் 4 எதிர்மனுதாரர்களை கட்சி சேர்க்க வேண்டுமென்று மனு தாக்கல் செய்துள்ளார். 2 முதல் 4 எதிர்மனுதாரர்களை கட்சி சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை. 2 முதல் 4 எதிர்மனுதாரர்களை

J ANNS RAJA
Digitally signed by J ANNS RAJA
Date: 2023.09.07 17:29:29 +0530

கஷ்ட, நஷ்ட படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் மனுதாரர் மனு தாக்கல் செய்துள்ளார்.மனுவானது எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டியதாக இருக்கிறது.

**<u>இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா?</u>**

3. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. மனுதாரர் அசல் வழக்கை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று தெரியவருகிறது. மனுதாரர் வழக்கில் 2ம் தபசில் சொத்தாக காட்டப்பட்டுள்ள சொத்தானது அரசுக்கு சொந்தமான நிலம் என்றும், அதனால் இவ்வழக்கில் 2 முதல் 4 உத்தேச எதிர்மனுதாரர்களை வழக்கில் 2 முதல் 4 பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார். எதிர்மனுதாரர் வழக்கறிஞர் தன்னுடைய வழக்குரையில் 2 முதல் 4 உத்தேச எதிர்மனுதாரர்கள் அவசிய தரப்பு என்றும் வழக்கில் சேர்க்க வேண்டும் என்று கட்சி செய்துள்ளார், ஆனால் தற்போது தாக்கல் செய்துள்ள இம்மனுவிற்கான எதிருரையில் அவர்கள் அவசிய தரப்பினர்கள் இல்லை என்றும், 2ம் தபசில் சொத்தானது அரசினுடைய நிலம் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தாவாவானது 1ம் எதிர்மனுதாரர் 2ம் தபசில் சொத்தில் கட்டுமானங்கள் செய்யக்கூடாது என்றும், அது பாதை என்றும் குறிப்பிட்டு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா 2 சொத்தானது அரசுக்கு சொந்தமான சொத்து என்று இம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் 2 முதல் 4 உத்தேச எதிர்மனுதாரர்களுக்கு எதிராக எந்த பரிகாரமும் கேட்கப்படவில்லை. மேலும் மனுதாரர் வழக்கில் தேவையான நபர்களை கட்சி சேர்க்கலாம் என்பது நீதியாகும். ஆகவே இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதாகும்.

J ANNS RAJA

Digitally signed by J ANNS RAJA
Date: 2023.09.07 17:29:38 +0530

இறுதியாக, இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2023ம் வருடம் செப்டம்பர் மாதம் 07–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

J ANNS RAJA Digitally signed by J ANNS RAJA Date: 2023.09.07 17:29:45 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வள்ளியூர்.

<u>மனுதாரர் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்:</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்:</u> இல்லை

J ANNS RAJA Digitally signed by J ANNS RAJA Date: 2023.09.07 17:29:55 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வள்ளியூர்.

---

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
வள்ளியூர்

**I.A.No. 03 of 2023**
**in**
**O.S. No. 152 of 2012**

வரைவு/ சீரான உத்தரவு

நாள் 07.09.2023

---